
Registered as a Newspaper
பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 240
செவ்வாய்க்கிழமை
23 ஜூலை 2024
ஆடி 07 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"அப்ப பிடிச்ச
கறுப்பு இன்னும்
விடாமல் கலக்குது
பாருங்கோ"

## ஜனாதிபதித் தேர்தல்: நிர்ணயமானது திகதி

கொழும்பு, ஜூலை 23
ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்குரிய திகதி தீர்மானிக்கப்பட்டுவிட்டது எனவும், அது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு இவ்வார இறுதிக்குள் வெளியிடப்படும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். 11

# பிரித்தாளும் தந்திரங்களால் தமிழர் அபிலாஷை அந்தரம்

யாழ்ப்பாணம், ஜூலை 23
சிங்களப்பேரினவாதத்தின்பிரித்தாளுகின்ற தந்திரங்களால், ஜனாதிபதித் தேர்தலைத் தமிழ்மக்கள் தரப்பில் செயல்முனைப்புடன் எதிர்கொள்ள வேண்டிய அரசியல் தேவையும், அவசியமும் எழுந்திருக்கிறது - என்று தமிழ்மக்கள் பொதுச்சபைக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் இடையில் நேற்று எட்டப்பட்ட ஒப்பந்தத்தின் பின்னரான ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்மக்கள் தரப்பிலிருந்து தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பாக தமிழ்ச் சிவில் சமூகமான தமிழ்மக்கள் பொதுச்சபைக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை நேற்றுத் திங்கட்கிழமை கைச்சாத்திடப்பட்டது. 11

ஜனாதிபதித் தேர்தல்

# தமிழ்ப் பொதுவேட்பாளருக்காக நேற்றுப் புரிந்துணர்வு ஒப்பந்தம்

யாழ்ப்பாணம், ஜூலை 23
ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்மக்கள் தரப்பிலிருந்து தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பாக தமிழ் சிவில் சமூகமான தமிழ்மக்கள் பொதுச்சபைக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் இடையில் நேற்றுப் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. 11

ஜனாதிபதித் தேர்தலில்

## வடக்கில்வாக்களிக்க 9 லட்சம் பேர் தகுதி

யாழ்ப்பாணம், ஜூலை 23
நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் வாக்களிப்பதற்கு 8 இலட்சத்து 99 ஆயிரத்து 268 பேர் தகுதி பெற்றுள்ளனர். 11

## காணி மாபியாக்களுடன் அதிகாரிகளும் தொடர்பு

மன்னாரில் மக்கள் போராட்டம்

மன்னார், ஜூலை 23
மன்னாரைச் சேர்ந்த விவசாயிகள் தமக்கான காணி உரிமை கோரி மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்று அடையாள கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டனர். 11

## கறுப்பு ஜூலை இன்று!

கொழும்பு, ஜூலை 23
தமிழர் தாயகத்தின் பல பகுதிகளிலும் இன்று கறுப்பு ஜூலையின் 41 ஆவது நினைவேந்தல் கடைப்பிடிக்கப்படுகின்றது. 11

## பொதுவேட்பாளர் விடயம் தமிழர்களுக்கு ஆயுதமே!

ஈ.சரவணபவன் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், ஜூலை 23
பொதுவேட்பாளர் விடயம் தமிழ் மக்களுக்கான ஓர் ஆயுதம். ஒரு தலைவனின் கீழ் தமிழினம் அன்று சரியாக வழிநடத்தப்பட்டது. இன்று பல தலைமைகளின் கீழ் தமிழ் மக்கள் சரியான தீர்மானத்தை எடுக்க முடியாது தள்ளாடுகின்றனர் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ் 11

வேலணையில்

## கடலட்டைப் பண்ணை: 52 பேருக்கு அனுமதி!

யாழ்ப்பாணம், ஜூலை 23
வேலணையில் கடலட்டைப் பண்ணைகளை அமைப்பதற்கு 52 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 11




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்பாளர்களின் செலவுகள்; இம்முறை புதிய சட்ட ஒழுங்கு

*மீறினால் சட்ட நடவடிக்கை*

**கொழும்பு, ஜூலை 23**

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர்களின் செலவுகளைக் கட்டுப்படுத்தி தேர்தல் ஒழுங்குமுறைச் சட்டமொன்றை முதன்முறையாக நடைமுறைப்படுத்த தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.**

தேர்தல் செலவுகள் ஒழுங்குமுறை சட்டத்தின்படி, ஜனாதிபதி வேட்பாளர் ஒருவருக்கான செலவுகளை ஆணையம் தீர்மானிக்கும்.

தேர்தல்கள் ஆணைக்குழு, இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு, சட்டமா அதிபர் திணைக்களம், காவல்துறை திணைக்களம் மற்றும் பல திணைக்களங்கள் இது தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடி இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன.

தேர்தல் செலவுகளை ஒழுங்குபடுத்துவது குறித்து அனைத்து அரச அதிகாரிகளுக்கும் தேர்தல்கள் ஆணையம் தெரிவித்துள்ளதோடு, செலவு வரம்பை மீறும் வேட்பாளர்கள் மீது இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் வழக்குத் தொடரப்படவுள்ளது.

வேட்பு மனு தாக்கல் செய்த 5 நாள்களுக்குள் ஒரு வேட்பாளர் எவ்வளவு செலவு செய்யமுடியும் என்பதை தேர்தல்கள் ஆணையம் அறிவிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## அரசாங்கச் சொத்து மைத்திரி 'அபேஸ்'

நீதிமன்றில் அம்பலம்



கொழும்பு, ஜூலை 23

ஜனாதிபதியாக இருந்த போது வழங்கப்பட்ட ஸ்வர்ணபூமி உரிமைப்பத்திரத்தை பயன்படுத்தி தனக்கென 10 அரச சொத்துகளை, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கையகப்படுத்தியுள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

உயர்நீதிமன்றில் அவர், சமர்ப்பித்த சொத்துப் பிரகடனத்தில் இது அம்பலமாகியுள்ளது.

மைத்திரிபால சிறிசேன கையகப்படுத்திய பத்து சொத்துகளில் ஐந்து வீடுகளும் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், நட்டஈடுகளை வழங்க கூடுதல் கால அவகாசம் வழங்குமாறு விடுத்த கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்து எதிர்வரும் ஓகஸ்ட் 30ஆம் திகதிக்குள் நட்டஈட்டுத் தொகையை முழுமையாகச் செலுத்த உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச-இ)

## போதைப்பொருள் பாவனை வருடாந்தம் 40,000 பேர் சாவு

கொழும்பு, ஜூலை 23

போதைப்பொருள் காரணமாக இலங்கையில் வருடாந்தம் சுமார் 40 ஆயிரம் பேர் இன்னமும் உயிரிழக்கின்றனர் என்று தேசிய ஆபத்தான மருந்துக் கட்டுப்பாட்டுச்சபை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அதன் தலைவர் ஷக்ய நாணயக்கார தெரிவிக்கையில்,

போதைப்பொருள் பாவனையிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாப்பதில் பெற்றோரின் பொறுப்பு மிக அவசியம்.

புகையிலை, மதுபானம் மற்றும் போதைப்பொருள் பாவனையால் இலங்கையில் வருடாந்தம் சுமார் 40,000 பேர் உயிரிழக்கின்றனர்.

அவர்களில் புகையிலைப் பாவனையால் சுமார் 20,000 பேரும், மதுப்பாவனையால் 18,000 பேரும், மற்ற போதைப்பொருள் பாவனையால் சுமார் 2,000 பேரும் உயிரிழக்கின்றனர்.

போதைப்பொருள் பாவனை தொடர்பான பிரச்சினைகள் தொடர்பான ஆலோசனைகளை 1927 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும் - என்றார். (ச-இ)

## வங்கிப் பரிவர்த்தனை இரகசியம் பேணுங்கள்

கொழும்பு, ஜூலை 23

நாட்டிலுள்ள பெரும்பான்மையான மக்கள் தமது வங்கி அட்டையின் கடவுச்சொல் மற்றும் வங்கிக் கணக்குத் தரவுகளின் பாதுகாப்புத் தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும் என்று மத்தியவங்கியின் மேற்பார்வையின் கீழ் நிறுவப்பட்ட குழுவால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமது வங்கிக் கணக்குத் தகவல்களை வெளித்தரப்பினருக்கு வழங்குவதால் மக்கள் தொடர்ந்து பல்வேறு மோசடிகளில் சிக்கி பணத்தை இழக்கநேரிடுகிறது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## மஹிந்தவின் வலதுகை ரணிலுக்கு ஆதரவாம்

கொழும்பு, ஜூலை 23

நான் மஹிந்த ராஜபக்சவின் வலது கை என்றபோதிலும் நாட்டின் நலன்கருதி ஜனாதிபதி ரணில் பக்கம் தற்போது நிற்கின்றேன். அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் அவருக்கே வாக்களிப்பேன் என்று இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்துள்ளார்.

அரசியல் பின்னணி கொண்ட குடும்பத்தில் இருந்தே நான் அரசியலுக்கு வந்துள்ளேன்.

ஜே.வி.பி.யினரின் மிரட்டல்களுக்கு அஞ்சமாட்டோம். ரணிலுக்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் வாக்களிக்கும்போது கை நடுங்கியது. ஆனால் அந்த முடிவு சரியென்பது இன்று உறுதியாகியுள்ளது. அடுத்த தேர்தலிலும் நான் ரணில் பக்கம்தான் நிற்பேன் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

## கீரிச்சம்பா செய்கை விரிவு

கொழும்பு, ஜூலை 23

அடுத்த பருவத்தில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 2000 ஏக்கர் கீரிச் சம்பா செய்கையை விரிவுபடுத்தவுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், இம்முறை சிறு மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் நெல்லைக் கொள்வனவு செய்யவேண்டும் என்பது அரசாங்கத்தின் உத்தரவு என அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## விஜயதாஸவை நீக்க ரணில் காய் நகர்த்தல்

கொழும்பு, ஜூலை 23

விஜயதாஸ ராஜபக்சவுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் முற்றியுள்ள நிலையில் விஜயதாஸவின் அமைச்சுப் பதவியைப் பறிக்க ரணில் விக்கிரமசிங்க காய்நகர்த்தல்களில் இறங்கியுள்ளார் என்று அரசதரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

22ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டவரைவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வர்த்தமானி மூலம் பிரசுரித்தமை தொடர்பில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச கடும் கண்டனத்தைப் பதிவு செய்திருந்தார்.

இந்த நிலையில் விஜயதாஸ ராஜபக்சவை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கினால் அது அரசாங்கத்துக்குப் பாதகமான சூழ்நிலைகளை ஏற்படுத்தும் என்பதால் விஜயதாஸ அவராகவே அமைச்சுப் பதவியைத் துறக்கும் சூழ்நிலையை உருவாக்க அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க உள்ளதாகத் தெரியவருகின்றது. (ச-இ)

## பல்கலைக் கட்டமைப்பினுள் அரசியலைப் புகுத்தாதீர்கள்

ஜனாதிபதி வேண்டுகோள்

கொழும்பு, ஜூலை 23

பல்கலைக்கழகக் கட்டமைப்புக்கு அச்சுறுத்தல் அரசியலை இல்லாதொழிக்கவேண்டும். மாணவர்கள் சுதந்திரமாக கல்வி கற்கவேண்டுமானால் பல்கலைக்கழக முறைமையை மறுசீரமைக்க வேண்டும் என்று ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதே அரசின் நோக்கமாகும். தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞான அறிவைக்கொண்ட மக்களே எமது நாட்டுக்கு அவசியமாகும்.

பல்கலைக்கழகக் கட்டமைப்பில் இருந்து அச்சுறுத்தும் அரசியலை அகற்ற வேண்டும். பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் சீர்குலையாமல் முறையான கல்வி நிறுவனங்களாக மாறவேண்டும் - என்றார். (ச-இ)



## பொதுத்தேர்தலில் மருத்துவர்கள்

கொழும்பு, ஜூலை 23

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பல மருத்துவர்கள் போட்டியிடவுள்ளனர் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தேசிய மருத்துவமனையில் பிரதிப்பணிப்பாளர் ருக்சான் பெல்லான அண்மையில் கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளராக நியமிக்கப்பட்டார். அதேவேளை தேசிய மக்கள் சக்திக்காக இந்த வருடம் பல மாவட்டங்களில் பல வைத்தியர்கள் போட்டியிடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வஜன வாக்கெடுப்பு இப்போது அநாவசியம்!

## பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜுலை 23

சர்வஜன வாக்கெடுப்புக்கு வழிவகுக்கும் வகையில் எந்தவொரு திருத்தத்தையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கொண்டு வரவேண்டாம் என ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல்.

இது தொடர்பாக அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளதாவது:-

நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் 10 பில்லியன் ரூபாவை செலவழித்து சர்வஜன வாக்கெடுப்பை நடத்தினால் அது நிதிக் குற்றமாகும்.

நிதி இல்லை எனத் தெரிவித்து உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ள நிலையில், சர்வஜன வாக்கெடுப்புக்கு வழிவகுக்கும் திருத்தங்களை அரசாங்கம் சமர்ப்பிப்பதை ஏற்றுக் கொள்ளமுடியாது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தவிர்த்துள்ள அரசாங்கம் தனது அதிகாரத்துக்காக எவ்வாறு செயற்படுகின்றது என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது - என்றார். (எ-இ)



# ராஜபக்சக்களின் ஆட்சி ஜனநாயக ஆட்சியாம்!

## சஞ்ஜீவ எதிரிமான்ன தெரிவிப்பு

பங்களாதேஷில் நடைபெறும் போராட்டத்தை அடக்குவதற்காக அந்நாட்டு அரசு இரும்புக்கரம் கொண்டு செயற்பட்டுவருகிறது. ஆனால் இலங்கையில் நடைபெற்ற அரகலயவின்போது போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்படவில்லை. இதுதான் ராஜபக்சக்களின் ஜனநாயக ஆட்சியாகும் - இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்ஜீவ எதிரிமான்ன தெரிவித்துள்ளார். இலங்கையில் 69இல் லட்சம் மக்களின் ஆணையுடன் ராஜபக்ச அரசு ஆட்சிப்பீடமேறியது. சஜித்தை விடவும் 14 இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளை எமது தரப்பு பெற்றிருந்தது. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி எடுக்கும் முடிவுக்கு நாம் கட்டுப்படுவோம். அடுத்த தேர்தலில் நிச்சயம் வெற்றி பெறுவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-25-44)

### ஹிருணிகாவுக்கு பிணை

கொழும்பு, ஜுலை 23

மூன்றுவருடகடூழியசிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் பிணை அனுமதி வழங்கியுள்ளது. 50 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீர பிணைகளில் செல்ல அனுமதித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா, ஹிருணிகாவுக்கு வெளிநாட்டு பயணத் தடை விதித்துள்ளார்.

2015ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 21ஆம் திகதி, தெமட்டகொட பிரதேசத்தில் கடையொன்றில் பணி புரிந்த அமில பிரியங்க என்ற இளைஞனை கறுப்பு நிற டிபெண்டர் வாகனத்தில் கடத்திச் சென்று, தடுத்து வைத்துத் தாக்கினார் என்று முன்வைக்கப்பட்ட 18 குற்றச்சாட்டுகளில் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதால் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்குச் சிறைத் தண்டனைவிதிக்கப்பட்டது. தண்டனைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீடு செய்துள்ள நிலையில், மேன்முறையீடு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு இறுதித் தீர்மானம் எடுக்கும்வரை தன்னைப் பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டும் என்று, அவர் கோரிக்கையை சமர்ப்பித்திருந்தார். (எ-இ)

### சர்வதேச ரீதியில் குறைந்துள்ள சிறுவரின் நோயெதிர்ப்பு சக்தி

உலகளாவிய ரீதியில் சிறுவர்களின் நோய்எதிர்ப்புசக்திகுறைவடைந்துள்ளது என்று உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தடுப்பூசியின் ஓர் அலகு கூட செலுத்தப்படாத சிறுவர்களின் எண்ணிக்கை 2022ஆம் ஆண்டு 13.9 மில்லியனாகக் காணப்பட்ட நிலையில், 2023 ஆம் ஆண்டு இந்த எண்ணிக்கை 14.5 மில்லியனாக அதிகரித்துள்ளது. இதனால் அம்மை நோய் பரவும் வேகம் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. அதேநேரம் 31 நாடுகளில் தடுப்பூசி செலுத்தாத சிறுவர்களின் எண்ணிக்கை அதிகளவில் உள்ளது என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-இ)

### அசங்கவுக்கு பிணை

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட தேசியப் பாதுகாப்பு கற்கை நிறுவகத்தின் முன்னாள் பணிப்பாளர் அசங்க அபேகுணசேகரவுக்குப் பிணை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படும் விசாரணைக்கமையப் பிறப்பிக்கப்பட்டிருந்த பிடியாணையின் பிரகாரம் அவர் விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார். (எ-இ)

# ரணிலின் ஊழல் கோப்பு தேசிய மக்கள் சக்தியிடம்

## அநுரகுமார கூறுகின்றார்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செய்தார் என்று கூறப்படும் ஊழல் மோசடி தொடர்பான தகவல்கள் அடங்கிய இரு கோப்புகள் தம்மிடம் உள்ளன என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். ஜப்பானுக்குச் சென்றுள்ள அவர் அங்குள்ள இலங்கையர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டார். அங்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தங்களது அரசாங்கத்தின் கீழ் இந்த ஊழல்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)



# புதினம் தெரியுமோ?

மடியில கனமில்லாட்டி வழியில பயமிருக்காது. அப்பிடிப் பயப்பிட்டால் ஏதோ பிரச்சினை இருக்கெண்டுதானே அர்த்தம். கொஞ்சநாளா எங்க திரும்பினாலும் 'மருத்துவ மாபியாக்கள்' எண்ட சொல்லைத்தான் அடிக்கடி கேக்கவும், பாக்கவும் முடியுது. இப்பிடிக் கதைக்க வைச்ச பெருமை முழுக்க டாக்குத்தர் அர்ச்சுனாவுக்குத்தான். அந்தாள் தானொரு டாக்குத்தரா இருந்துகொண்டே, மற்ற டாக்குத்தர்மார் விட்ட, விடுகிற பிழையளை வெளியால கதைச்சவர். அவர் கதைச்சதில எவ்வளவு தூரம் உண்மை, பொய் எண்டு ஒருத்தருக்கும் தெரியாது. ஆனால் உந்த டாக்குத்தர்மாரின்ர தன்னிச்சையான போக்குக்கு ஆர் முதலில மணி கட்டுறதெண்டு எல்லாரும் குழம்பிக் கொண்டிருக்கேக்கதான், அர்ச்சுனா முதல்ல உந்த மருத்துவ மாபியாக்களுக்கு மணிகட்டினார். இப்ப எல்லாப் பக்கமும் ஒரே 'மருத்துவ மாபியாக்கள்' பற்றித்தான் கதை.

என்னதான் சில டாக்குத்தர்மார் ஒண்டிரண்டு பிழையள் விட்டிருந்தாலும், உந்த மருத்துவ மாபியா எண்ட சொல், கொஞ்சம் வேனுமெண்டே விசயத்தைப் பெரிசாக்கிறதுக்காக அர்ச்சுனா பாவிச்சிட்டாரோ எண்டுதான் கன சனங்கள் நினைச்சவை. ஆனால் நடக்கிற சம்பவங்களைப் பாக்கேக்க, அர்ச்சுனா சொன்னமாதிரி இஞ்ச மருத்துவமாபியாக்கள் இருக்கினம் எண்ட கருத்து உண்மையோ எண்டும் யோசிக்கவேண்டியிருக்கு. போன புதன்கிழமை சுகாதாரத்துறை அமைச்சர் யாழ்ப்பாணம் வந்தவரெல்லோ. அண்டைக்கு அவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்குப்போய், அங்க குவார்ட்டஸில இருக்கிற டாக்குத்தர் அர்ச்சுனாவையும், இப்ப அந்த ஆஸ்பத்திரிக்கு பொறுப்பா இருக்கிற டாக்குத்தர் ரஜீவையும் சந்திச்சு, இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கிறதும் அவரின்ர விசிட் பிளானில இருந்தது. ஆனால் திடீரெண்டு அவர் அதை மாத்திப்போட்டார். டாக்குத்தர் அர்ச்சுனாவைச் சந்திக்காமலே அமைச்சர் கொழும்புக்குப் போட்டார்.

'அர்ச்சுனாவைச் சந்திச்சு இந்தப் பிரச்சினைக்கு நல்ல முடிவொண்டு குடுத்திருக்கலாமே?' எண்டு அவரைச் சந்திச்ச மனோ கணேசன் எம்.பி. கேட்டிருக்கிறார். 'போயிருக்கலாம் தான். ஆனால் போக வேண்டாம். அர்ச்சுனாவைச் சந்திக்கவேண்டாம் எண்டு சிலர் மறிச்சுப் போட்டினம்' எண்டு கவலையாச்சொன்ன அமைச்சர், அவையள் ஆரெண்டதையும் மனோ கணேசனுக்குச் சொல்லியிருக்கிறார். இதைக் கேள்விப்பட்டதும், மனோ கணேசன் அதை பேஸ்புக்கில போட்டு வெளிச்சத்துக்கு கொண்டந்திட்டார். ஒரு பிரச்சினையைத் தீர்க்கவேணும் எண்டால், அதில சம்பந்தப்பட்ட ரண்டு தரப்பையும் கண்டு, கதைச்சாத்தானே நல்ல முடிவை எடுக்கலாம்? உண்மையா இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண ஆரும் நினைச்சிருந்தால் அவையள் அர்ச்சுனாவை சந்திக்கவெல்லோ விட்டிருக்கோனும். அதைவிட்டிட்டு ஏதோ அர்ச்சுனா துடக்குக்காரர் மாதிரி அவரைச் சந்திக்கவேண்டாம் எண்டு அமைச்சரை வெருட்டி மறிச்சால் அதுக்கு என்ன அர்த்தம்? அர்ச்சுனாவைச் சந்திச்சால், இவையின்ர குட்டுகள் வெளியில வந்திடும் எண்ட பயம் தானே? அப்ப அர்ச்சுனா சொன்னமாதிரி மருத்துவ மாபியாக்கள் எங்களுக்குள்ள இருக்கினமோ?



- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




'உதயன்' ஊடக அனுசரணையுடன் நடத்தப்பட்ட

# தென்மராட்சி பிக் பாஸ் லீக்கில் மட்டுவில் வொரியர்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 23

'உதயன்' நாளிதழின் ஊடக அனுசரணையுடன் நடத்தப்பட்ட தென்மராட்சி பிக் பாஸ் லீக் தொடரில் மட்டுவில் வொரியர்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றதுடன், 5 லட்சம் ரூபா பணப் பரிசையும் தட்டிச் சென்றது. தென்மராட்சி பிக் பாஸ் லீக்கின் இரண்டாம் பருவம் கடந்தமாதம் முதலாம் திகதி ஆரம்பமானது. அதில் சாவா ஸ்ரிக்கர்ஸ், சாவா மாஸ்டர் பற்றர்ஸ், பவர் ஸ்குஆட், நுணாவில் டொமினேற்றர்ஸ், நுணாவில் றொக்கர்ஸ், மட்டுவில் வொரியர்ஸ், கைதடி சூப்பர் கிங்ஸ், கைதடி வோர் எவர் வின்னர்ஸ், நாவற்குழி பிக் பூட்டர்ஸ் ஆகிய அணிகள் லீக் முறை ஆட்டங்களில் பங்கேற்றன.

நேற்றுமுன்தினம் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் மட்டுவில் வொரியர்ஸ் அணியும், சாவா மாஸ்ரர் பற்றர்ஸ் அணியும் மோதிக்கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மட்டுவில் வொரியர்ஸ் அணி களத் தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சாவா மாஸ்ரர் பற்றர்ஸ் அணி 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 விக்கெட்டுகளை இழந்து 75 ஓட்டங்களைப் பெற்றது. ஜெனி 35 ஓட்டங்களையும், தனுஷ் 12 ஓட்டங்களையும், கௌசி 9 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். மட்டுவில் வொரியர்ஸ் அணி சார்பில் பந்துவீச்சில் மாதங்கன் இரு விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் வொரியர்ஸ் அணி 8.1 பந்துப்பரிமாற்றங்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 77 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. துசி 31 ஓட்டங்களையும், பார்த்தி 28 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

ஆட்டநாயகனாக மட்டுவில் வொரியர்ஸ் அணி வீரர் பார்த்தியும், தொடர் ஆட்ட நாயகனாக மட்டுவில் வொரியர்ஸ் அணி வீரர் துஷியும் தெரிவு செய்யப்பட்டனர்.

இறுதிப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக உதயன் பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் ஈஸ்வரபாதம் சரவணபவனும், சிறப்பு விருந்தினராக சமூக சேவகர் மு.அகிலன், சிங்கர் நிறுவன யாழ்ப்பாணக் கிளை முகாமையாளர் க.சிவகரன், சாவகச்சேரி பொலிஸ் அத்தியட்சகர் பாலித சேனாரத்ன, வர்த்தகர்களான விமலகாந்தன், பிரசன்னா, அபிவர்மன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இறுதி ஆட்டத்தில் வெற்றிபெற்ற மட்டுவில் வொரியர்ஸ் அணிக்கு வெற்றிக் கிண்ணமும், 5 லட்சம் ரூபா பணப் பரிசிலும் வழங்கப்பட்டது. இரண்டாம் இடத்தைப் பெற்ற சாவா மாஸ்டர் பற்றர்ஸ் அணிக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணப் பரிசில் வழங்கப்பட்டது. (எ-125)

# மீனவர்களை தேடும் பணி தொடர்கிறது

யாழ்ப்பாணம், ஜூலை 23

பருத்தித்துறையிலிருந்தும், அம்பாந்தோட்டையிலிருந்தும் கடற்றொழிலுக்குச் சென்ற 6 மீனவர்கள் தொடர்பாக இதுவரை தகவல் எதுவும் கிடைக்கவில்லை எனக் கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் குறித்த கடற்பிராந்தியங்களை அண்மித்துப் பயணிக்கும் கப்பல்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் கடற்றொழில் அமைச்சு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளது.

பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து 4 மீனவர்களும், அம்பாந்தோட்டையிலிருந்து இரண்டு மீனவர்களும் கடந்த 7 ஆம் திகதி கடற்றொழிலுக்குச் சென்றிருந்த நிலையில், இரண்டு படகுகளுடன் காணாமற் போயுள்ளனர். இந்நிலையில் கடற்படையினரின் உதவியுடன் காணாமற் போன மீனவர்களைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் கடற்றொழில் அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ப-66)

வன்னேரிக்குளம்

# ஆரம்பமருத்துவப்பிரிவில் ஐந்துநாள்களும்சிகிச்சை

கிளிநொச்சி, ஜூலை 23

வன்னேரிக்குளம் ஆரம்ப மருத்துவப் பராமரிப்புப் பிரிவில் வாரத்தில் 5 நாள்களும் சிகிச்சைகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வன்னேரிக்குளம் ஆரம்ப மருத்துவப் பராமரிப்புப் பிரிவில் இதுவரை காலமும் திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் காலையில் இடம்பெற்று வந்த வெளிநோயாளர் பிரிவுக்கான சிகிச்சைகள், திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை தினமும் காலையில் இடம்பெறுமென நேற்றுத் திங்கட்கிழமை அறிவிக்கப்பட்டுள்ளது. உள்ளகப் பயிற்சியை நிறைவு செய்த மருத்துவ உத்தியோகத்தரொருவர் அக்கராயன் பிரதேச மருத்துவ அணியினருடன் இணைக்கப்பட்டுள்ள நிலையில் இந்த வெளிநோயாளர் பிரிவு சேவைகள் விஸ்தரிக்கப்படுகின்றன.

அக்கராயன் பிரதேச மருத்துவமனை, உருத்திரபுரம் பிரதேச மருத்துவமனை, வன்னேரிக்குளம் ஆரம்ப மருத்துவப் பராமரிப்புப் பிரிவு ஆகியவற்றின் மூன்று மருத்துவ உத்தியோகத்தர்கள் இணைந்து அக்கராயன் பிரதேச மருத்துவமனையில் 24 மணிநேர சேவையையும், வன்னேரிக்குளம் ஆரம்ப மருத்துவ பராமரிப்புப் பிரிவில் கிழமையில் மூன்று தினங்கள் காலையில் வெளிநோயாளர் பிரிவையும் இயக்கி வந்தது. (ப-13)

## விருது வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 23

இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில் பேரவைத் தலைவர் ஈசான சிவசக்திகிரீவன் தலைமையில் விருது வழங்கும் நிகழ்வு யாழ். இந்து சமயப் பேரவை நடராஜர் மண்டபத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. (எ25)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதர வகையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். தாய்வழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். செரிமானப் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல்நலனில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்களால் செலவுகள் ஏற்படலாம். மகிழ்ச்சியே ஏற்படும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். புதிய நண்பர்களின் அறிமுகமும் அவர்களால் ஆதாயமும் கிடைக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**துலாம்:** இன்று பொறுமையுடன் செயற்பட வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளுக்காக பாடுபட வேண்டி இருக்கும். பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும்

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். மறைமுக எதிர்ப்பு நீங்கும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பம் தொடர்பான பிரச்சினை ஒன்றில் வாழ்க்கைத்துணை உங்களுடைய ஆலோசனையைக் கேட்டு வருவார். பிற்பகலுக்கு மேல் பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**மகரம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும்.

**மீனம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது நல்லது. வாழ்க்கைத் துணையின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


## என்று விடியும் ஜூலையின் இரவுகள்!

*1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் இதே நாள்களில்* இலங்கைத்தீவு பற்றியெரிந்தது. கறுப்பு ஜூலை என்று அடையாளப்படுத்தப்பட்டன அந்த நாள்கள். இன்றுவரையும் அந்தநாள்களும்சரி, அதற்கான காரணங்களும்சரி, தமிழர்களின் வாழ்வும்சரி தொடர்ந்தும் இருண்மை சூழ் நிலையிலேயே இருக்கின்றன. விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையில் திருநெல்வேலி தபால்பெட்டி சந்தியில்நடத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதையடுத்து நாடெங்கிலும் இயல்பாகவே ஒரு பதற்றம் ஏற்பட்டிருந்தது. அதை மேலும்கொழுந்துவிட்டுஎரியச்செய்வதைப்போன்று இறந்த சிப்பாய்களுக்கு மிகப்பெரும் எடுப்பில் இறுதிச் சடங்குகள்நடத்தப்பட்டன. சிங்களக் காடையர்கள் மதுவால் உருவேற்றப்பட்டனர். இதைத் தொடர்ந்தே கொழும்பில் உச்சக்கட்ட வேகத்தில் ஆரம்பித்தது இந்த வெறியாட்டம்.

சுமார் ஒரு வாரத்துக்கும் மேலாக இடம்பெற்ற இந்த மிலேச்சத்தனமாக தாக்குதல்களில், 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர். சுமார் 2 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் இடம்பெயர்ந்தனர். பல்லாயிரக் கணக்கானவர்கள் காயமடைந்தனர். இதன் பின்னர்தான் இலங்கைத் தீவில் தமிழர், சிங்களவர் பிரச்சினைகளும் பிரிவினை வாதங்களும் உச்சவேகம் பெறத் தொடங்கின. ஆனால், எதற்காக இந்தக்கறுப்பு ஜூலை கலவரங்கள் இடம்பெற்றன என்று எண்ணிப் பார்த்தால் அதற்கான காரணங்கள், இன ஒடுக்குமுறைகளும் அடக்குமுறைகளும்தான். துயரம் என்னவெனில் இப்படியொரு மிகக் கேவலமான குருதிச் சகதி இடம்பெற்ற பின்னரும், அதன் தோற்றுவாயான காரணங்கள் இன்னும் தீர்க்கப்படாமல் அப்படியேதான் இருக்கின்றன.

இன்று தமிழர் தேசத்தில் இடம்பெறும் அத்துமீறல்கள் கொஞ்சநஞ்சம் அல்ல. ஏகப்பட்ட வடிவங்களில் பல்வேறு பிரச்சினைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன. குருந்தூர்மலை, வெடுக்குநாறி மற்றும் எண்ணற்ற தமிழர் தாயகப் பகுதிகளில் புதிது புதிதாக பௌத்த விகாரைகள், சைவ ஆலயங்கள் மீதான தாக்குதல்கள், சிங்களக் குடியேற்றங்கள், தமிழ்மொழி புறக்கணிப்பு, தனிச் சிங்கள நியமனங்கள், காணி அபகரிப்பு, இராணுவ மயமாக்கல், காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், மனிதப்புதைகுழிகள் என்று எண்ணற்ற பிரச்சினைகளை இன்று தமிழர் தாயகம் தாங்கி நிற்கின்றது. ஆக, எதற்காக இந்தத் தேசத்தில் தமிழ் மக்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் இவ்வளவு பாரதூரமான விரிசல் விழுந்ததோ அந்த விரிசலை நெருக்கமாக்குவதற்குப் பதிலாக 'இன்னும்பிளவுபடுத்தி' அந்தப்பிரிவினையை தமது வாக்குவங்கியாக்கி 'தேர்தலிகளில் வென்று' ஆட்சியதிகாரத்தில் குளிர்காயவே சிங்கள - பௌத்த பேரினவாதத்தை உயிர்மூச்சாகக் கொண்ட சிலர் கங்கணம்கட்டி நிற்கின்றனர்.

வரலாறு ஒரு பேராசான். அது ஆகச்சிறந்த கற்பிதங்களை யதார்த்தமாக உணர்த்தும். அதை ஆராய்ந்து அந்த 'இழிநாள்களுக்கு' என்ன காரணமோ அதைத் தீர்த்து சகோதர மனப்பான்மையையும் இனப்பன்மைத்துவத்தையும் கட்டியெழுப்புவதுதான் ஓர் அரசின் உன்னதமான பணியாக இருக்க முடியும். ஆனால், என்ன காரணத்துக்காக கறுப்பு ஜூலை இடம்பெற்றதோ, அதை இம்மியும் தளர்ந்துபோகவிடாது மேலும் மேலும் ஊதிப்பெருப்பிப்பதைத்தான் இதுவரை மாறிமாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் செய்தன. செய்து கொண்டிருக்கின்றன. இந்த மெத்தனப் போக்கில் ஆத்மார்த்தமான மாற்றங்கள் ஏற்படாதபட்சத்தில், ஜூலையின் இரவுகள் இன்னும் எத்தனை ஆண்டுகளானாலும் இருண்டேதான் இருக்கும்.




# 5 ஆண்டுகளில் அரசுக்கு 22 பில்லியன் ரூபா இழப்பு

**கொழும்பு, ஜூலை 23**

**கடந்த ஐந்தரை ஆண்டுகளில் அரசாங்கம் 22 பில்லியன் ரூபா வரிப் பணத்தையும், தண்டப் பணத்தையும் இழந்துள்ளது என்று தேசிய கணக்காய்வு அதிகாரசபை தெரிவித்துள்ளது.**

2022 டிசெம்பர் மாதம்வரை நிலுவையாக இருந்த 369 பில்லியன் ரூபா வற் வரிப் பணத்தில் 255 பில்லியன் ரூபாவை அறவீடு செய்வதைத் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது என தேசிய கணக்காய்வு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

2023 மே மாதம் வரையும் 98.5 பில்லியன் ரூபா பெறுமதியான 4 ஆயிரத்து 999 வற் தொடர்பான மேன்முறையீடுகளுக்குத் தீர்வு காணப்படாமல் உள்ளது என்றும் தேசிய கணக்காய்வு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

நிலுவையாக உள்ள வரிப் பணத்தை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கணக்காய்வாளர் நாயகத்துக்கு தேசிய கணக்காய்வு அதிகாரசபை பரிந்துரைத்துள்ளது. (எ-6)

# வாகன இறக்குமதித் தடை அடுத்தாண்டுவரை நீடிப்பு

கொழும்பு, ஜூலை 23

தனியார் வாகன இறக்குமதித் தடை அடுத்த ஆண்டு ஆரம்பம் வரையில் நீடிக்கப்பட்டுள்ளது என்று அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வாகன இறக்குமதித் தடை நீக்கப்பட்டால் ஆண்டுக்கு சுமார் ஒரு பில்லியன் டொலர் நாட்டிலிருந்து வெளியேறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டின் பொருளாதாரம் போதுமான அளவு உறுதிப்படுத்தப்படாததாலும், வாகன இறக்குமதியை எளிதாக்குவதற்கு அந்நியச் செலாவணிக் கையிருப்பு போதுமான அளவில் இல்லாததாலும், இறக்குமதித் தடையை அடுத்த ஆண்டு ஆரம்பம்வரை நீடிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (எ-இ)



# இலங்கை வருகிறார் எலான் மஸ்க்

கொழும்பு, ஜூலை 23

ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் நிறுவுநர் எலான் மஸ்க் எதிர்வரும் மாதம் இலங்கை வரவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை வரவிருந்த அவரது பயணம் முன்னர் பிற்போடப்பட்டிருந்த நிலையில், தற்போது அவர் ஓகஸ்ட் மாத இறுதியில் வருவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எலான் மஸ்க் தனது நிறுவனத்தின் ஸ்டார்லிங்க் செயற்கைக்கோள் அடிப்படையிலான இணைய சேவையை இலங்கையில் ஆரம்பிப்பதற்காகவே வருகின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# 10 லட்சம் சுற்றுலாவிகள் வருகை

இந்த வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூலை மாதம் 18 ஆம் திகதி வரை நாட்டுக்கு 10 லட்சத்து 19 ஆயிரத்து 642 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர். இதேவேளை, ஜூலை மாதம் மூன்றாவது வாரத்தின் முதல் நான்கு நாள்களில் 23 ஆயிரத்து 967 சுற்றுலாவிகள் இலங்கை வந்துள்ளனர். இந்தியாவில் இருந்தும், பிரித்தானியா, சீனா, ஜேர்மனி மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்தும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (எ-இ)

# காட்டுக்கு தீ வைப்பதை தவிர்க்க கோரிக்கை

காட்டுக்குத் தீ வைப்பதை மக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று இடர் முகாமைத்து மத்திய நிலையத்தின் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார். நாட்டின் பல பாகங்களில் காட்டுத் தீ பரவல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்றும், பதுளை மாவட்டத்தில மட்டும் 6 காட்டு தீ பரவல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## நாளை

24.07.2024

**புதன்கிழமை - ஆடி - 08**

சுபநேரம் : 04.32 - 06.02

ராகுகாலம் : 12.02 - 01.32

சங்கடஹர சதுர்த்தி

## நாளொரு நல்வார்த்தை

**மனிதன் சுதந்திரமாகச் செயற்படுவதைக் காட்டிலும், மற்றவர்களைச் சார்ந்தே வாழ்கிறான்.**

- பெர்னாட்ஷோ-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வீதியில் சிந்திய மணல்; சறுக்கும் பயணிகள்

## அகற்றுமாறு கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஜூலை 23**
**அரியாலைச் சந்தி ஏ-9 வீதியில் நீண்ட தூரத்துக்கு மண் கொட்டப்பட்டு காணப்படுவதால் சறுக்கிவிழும் அபாயத்துடன் சிரமத்தின் மத்தியில் பயணிக்க நேரிடுகிறது என்று பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

கடந்த சில நாள்களாக இந்த வீதியில் மண் கொட்டப்பட்டுக் காணப்படுகின்றது. மண் கடத்தல்காரர்களை பொலிஸார் துரத்தியவேளை அவர்கள் வீதியில் மண்ணைக் கொட்டிவிட்டுச் சென்றிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. குறித்த வீதியில் வளைவு காணப்படுவதால் கொட்டப்பட்டுள்ள மண்ணால் விபத்துகள் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம் காணப்படுகின்றன.

எனவே உரிய அதிகாரிகள் குறித்த மண்ணை அகற்றி பாதுகாப்பான போக்குவரத்துக்கு வழி சமைக்கவேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச- 27,20)

# மின்விளக்கை அணைத்து இருட்டில் சோதனைகள்

## அச்சத்தில் மக்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 23
வீதி மின்விளக்குகளை இரவு வேளைகளில் அணைத்து விட்டு இருட்டினுள் நின்று, கோப்பாய் பொலிஸார் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக மக்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

வீதியில் வரும் வாகனங்களை மறித்து சோதனை செய்யும் வேளையில், தாம் கடமையில் நிற்கும் இடத்தில் வீதி மின் விளக்குகளை அணைத்து விட்டு இருட்டில் நிற்பதால், வீதியால் பயணிப்போர் மத்தியில் அச்ச நிலைமை ஏற்படுகிறது.

தமது கடமை நேரம் முடிந்து, அவ்விடத்திலிருந்து செல்லும் போது அணைத்த மின் விளக்குகளை மீண்டும் போடாமல் செல்வதால் குறித்த சந்தி இருளில் மூழ்கிய நிலையில் காணப்படுகின்றது. இதுகுறித்து பொலிஸ் அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ப-20)

# குறைக்காவிட்டால் கட்டுப்பாட்டு விலை

யாழ்ப்பாணம், ஜூலை 23
இரண்டு வாரங்களுக்குள் அத்தியாவசியப்பொருள்களின் விலைகள் குறைக்கப்படாவிட்டால் நாடாளுமன்றத் தீர்மானத்தின் மூலம் கட்டுப்பாட்டு விலையை நடைமுறைப்படுத்துவோம் என போக்குவரத்து அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தற்போது மின்கட்டணம் 22.5% குறைக்கப்பட்டுள்ளது.

எரிபொருள், எரிவாயு என்பவற்றின் விலைகளும் கணிசமான அளவு குறைக்கப்பட்டுள்ளன.

இதற்கமைவாக அத்தியாவசியப்பொருள்களின் விலைகளும் குறைக்கப்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ப-6)

# தெளிவூட்டல் நிகழ்வு


யாழ்ப்பாணம், ஜூலை 23
தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு மற்றும் நல்லூர்ப் பிரதேச செயலகம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த, பாதுகாப்பான தொழிலாளர் ஆட்சேர்ப்பும், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் சேவைகள் தொடர்பான தெளிவூட்டலும் நாளை புதன்கிழமை காலை 9 மணி முதல் பி.ப. 12.30 மணி வரை நல்லூர்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் தொழிலை எதிர்பார்ப்போர் மற்றும் ஆர்வமுள்ளவர்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்புத் தொழிலில் ஈடுபட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள், வெளிநாட்டுத் தொழிலை முடித்து நாடு திரும்பியவர்கள் கலந்துகொள்ள முடியுமென நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ப-66)

# மாற்றுத்திறனாளிகளுக்கு இசைப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 23
மாற்றுத்திறனாளிகளை மகிழ்வானவர்களாக வைத்திருக்க புதிய வாழ்வு நிறுவனமும், சாவிகா சங்கீத அறிவாலய அமைப்பும் இணைந்து, வடக்கின் மாற்றுத்திறனாளிகளுக்கான இசைப்போட்டியை எதிர்வரும் 27 ஆம் திகதி யாழ்.மங்கையற்கரசி வித்தியாலயத்தில் காலை 9 மணிக்கு நடத்தவுள்ளது.

போட்டியில் மாற்றுத்திறனாளிகள் கலந்துகொண்டு திறமைகளை வெளிப்படுத்தவேண்டும் என்று புதிய வாழ்வு இல்லத்தின் இணைப்பாளர் விஜயகுமார் விஜயலாதன் தெரிவித்தார். (ப-20)



# மேசைப்பந்தில் முதலாமிடம்!

யாழ்ப்பாணம் , ஜூலை 23
வடக்கு மாகாண மட்ட பெரு விளையாட்டுப் போட்டி யாழ்ப்பாணத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இந்தப் போட்டியில் கிளி. மத்திய கல்லூரியின் மேசைப்பந்து அணி முதலாம் இடத்தைப் பெற்றது. (ச-22,13)

# லயன்ஸ் கழகத்தின் பதவியேற்பு விழா!

யாழ்ப்பாணம், ஜூலை 23
வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் 47 ஆவது பதவியேற்பு விழாவில் புதிய அங்கத்தவர்களை இணைக்கும் நிகழ்வு சம்பிரதாய பூர்வமாக சித்தன்கேணியில் அமைந்துள்ள வட்டுக்கோட்டை லயன்ஸ் கழக செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது .

வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினரும், சமாதான நீதிவானுமாகிய ஜெயந்தன் லயன்ஸ் கழகத் தலைவராக தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். நிகழ்வில் பிரதம விருந்தினராக லயன்ஸ் கழகங்களின் இரண்டாம் நிலை உப ஆளுநர் ஜீவந்த பெரேரா, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரான ஈ.சரவணபவன், திருமதி யசோதை சரவணபவன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-22,125)



# முட்டை இறக்குமதி

## அரசாங்கம் கவனம்!

யாழ்ப்பாணம், ஜூலை 23
முட்டையை இறக்குமதி செய்வது தொடர்பாக அரசாங்கம் மீண்டும் கவனம் செலுத்தியுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

உள்ளூர்ச் சந்தையில் முட்டையின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதைக் கவனத்திற் கொண்டே முட்டையை இறக்குமதி செய்வது தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ச-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




நவிண்டில் கப்பியந்தோட்ட பெரியஞ்சீமா ஞான வைரவர் அறநெறிப் பாடசாலைக்கு, கிருபா சாரதி பயிற்சிப் பாடசாலை அதிபர் அ.கிருபா கரன் ரூபா 50 ஆயிரம் பெறுமதியான காசோலையை அவரது முகாமையாளர் ஊடாக ஆலயத் தலைவரிடம் வழங்கி வைத்துள்ளார். (ப)



அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு, நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவம் இடம்பெற்றது. (ப-100)

உடுவில் பிரதேச செயலகமும் இணுவைத் தமிழ்ச் சங்கமும் இணைந்து முன்னெடுத்த ஆடிப்பிறப்பு விழா, கடந்த புதன்கிழமை இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இணுவைத் தமிழ்ச் சங்கத் தலைவர் ச.முகுந்தன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் உடுவில் பிரதேச செயலர் பாலசுந்தரம் ஜெயகரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். (ப-66)





வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்த சுவாமி கோயில் குரோதி வருடக் காம்யோற்சவப் பெருவிழாவின் பத்தாம் நாளான கடந்த சனிக்கிழமை திருமஞ்சப் பவனி நடைபெற்றது. (ப66)



# அடிக்கல் நடுகை விழா

'ரில்கோ ப்ளூ ஓசன்' நிறுவனத்தின் சொகுசு வீட்டுத் தொகுதிக்கான அடிக்கல் நடுகை விழா, யாழ்ப்பாணம்கண்டி வீதியிலுள்ள, பழைய பூங்காவுக்கு முன்பாக கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. குறித்த சொகுசுமாடி வீட்டுத் தொகுதியானது, புதிய பரிமாண வளர்ச்சி தொழில்நுட்பங்களைக் கொண்டு அமைக்கப்படவுள்ளது. (ப-20)





'ஆடிக்கூழ் குடித்தலும் ஆடிப்பாடி மகிழ்தலும்' எனும் தொனிப்பொருளில், ஆடிப்பிறப்பு நிகழ்வு சண்டிலிப்பாய் மத்திய கலாசார நிலையத்தில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் தென்னாடு இதழ் ஆசிரியர் சிவத்திரு.செந்தமிழாதன் சஜீவன், கலாசார மத்திய நிலைய அபிவிருத்திச் சங்க உபதலைவர் கந்தசாமி ஐயா, ஆசிரிய வளவாளர்கள், பெற்றோர், மாணவர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-125)



கிளிநொச்சி வடக்கு வலயத்தின் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான செயற்பட்டு மகிழ்வோம் வலய மட்ட நிகழ்வு பரந்தன் இந்து மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் க. [illegible] கலந்து கொண்டார். (ப-22-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறையில் கத்திவெட்டு, இரும்புக் கம்பித் தாக்குதலில் மூவர் காயம்!

யாழ்ப்பாணம், ஜூலை 23
பருத்தித்துறையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் இருவர் கத்தி வெட்டுக்கு உள்ளானதுடன் ஒருவர் இரும்புக் கம்பியால் தாக்கப்பட்டு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத்தெருப் பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 9.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-100)


## பெயர் மாற்றம்

அராலி வடக்கு, வட்டுக்கோட்டையில் வசிக்கும் **நவரத்தினம் யோசேப் ஜெயகுமார்** ஆகிய நான் எனது பெயரை **நவரத்தினம் ஜோசேப்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **நவரத்தினம் ஜோசேப்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசுமக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**நவரத்தினம் ஜோசேப்**

cs.55735 B) N -1)

## பெயர் மாற்றம்

அராலி வடக்கு, வட்டுக்கோட்டையில் வசிக்கும் **நவரத்தினம் ரூத் சாந்தகுமாரி** ஆகிய நான் எனது பெயரை **நவரத்தினம் றெபேக்கா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **நவரத்தினம் றெபேக்கா** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**நவரத்தினம் றெபேக்கா**

cs.55735 A) N -1)


# பருத்தித்துறையில் அநுரவுக்கு சாணி





தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அநுரகுமாரவின் சுவரொட்டி மீது பருத்தித்துறையில் சாணி பூசப்பட்டுள்ளது.
ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு அநுரகுமாரவின் சுவரொட்டிகள் நாடுமுழுவதும் ஒட்டப்பட்டு வருகிறது– இவ்வாறு வடமராட்சி பருத்தித்துறை, தும்பளை வீதியில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டி மீதே சாணி பூசப்பட்டு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம–100)

# பாடசாலை மட்ட மாணவர் சந்தை

யாழ்ப்பாணம், ஜூலை 23
யாழ். காங்கேசன்துறை ஊறணி கனிஷ்ட வித்தியாலயத்தின் பாடசாலை மட்ட மாணவர் சந்தை இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் பாடசாலை அதிபர் பா.செந்தூரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய தொழில் வழிகாட்டல் அலுவலர் தி.உதயகுமார், ஊறணி அந்தோனியார் ஆலயப் பங்குத் தந்தை அருட்பணி செ.ம.சுதர்சன் இலங்கை வங்கியின் காங்கேசன்துறைக் கிளை முகாமையாளர் த.ஹரிகரன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-66)


## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 09 . 1942



மறைவு 19 . 07 . 2024

### சூசைப்பிள்ளை மரியநாயகம்

இளவாலையை பிறப்பிடமாகவும் அலுக்கை, அளவெட்டி மற்றும் தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை மரியநாயகம் அவர்கள் கடந்த (19.07.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை-அந்தோனியா ராணி தம்பதியரின் அன்பு மருமகனும், ஆன்புனிதம் அவர்களின் அன்புக் கணவரும், ஜொஸ்மிலா (USA), Dr.அனோமிலன் (போதனா வைத்தியசாலை - மட்டக்களப்பு), பியோமிலன் (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான பிலோமினா, சந்தானசாமி மற்றும் ஜோசேப்பின் வில்லி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், யூட் இலங்காதரன் (USA), ஷோபா, Dr.வருஷினி (UK) ஆகியோரின் அன்பு மாமனாரும், அமையரன், இஸோட்ரா, அயோமி, ஜெரேமி, மிரன் ஆகியோரின் பாசமிகு பேரனும், மகாதேவன், ஜெயக்குமார், சந்திரா, மேரிவிமலா, ரெட்ணராஜ், தேவராஜ், யோகராஜ், ரெஜினாமலர், ஓங்கராஜ், கமலா, காலஞ்சென்ற யூட் ஆனந்தராஜ் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், பாரதி (UK), சுகந்தன் (UK) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் இறுதி மரியாதைக்காக யாழ்ப்பாணம் WHITE HOUSE மலர்ச்சாலையில் நாளை (24.07.2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை வைக்கப்பட்டு நாளைமறுதினம் (25.07.2024) வியாழக்கிழமை அவரது அளவெட்டி இல்லத்தில் காலை 8.00 மணிமுதல் 9.00 மணிவரை வைக்கப்பட்டு பின்னர் அளவெட்டி புனித சூசையப்பர் ஆலயத்தில் காலை 9.00 மணிக்கு திருப்பலி நடைபெற்று அளவெட்டி சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
**077 480 3271**

(CS 55730)

## வேலையாள்கள் தேவை

சைவ உணவகம் ஒன்றிற்கு சமையலாளர், இடியப்பம் போடக்கூடியவர் மற்றும் உணவு பரிமாறுபவர், சமையல் உதவியாளர்கள், கொத்துரொட்டி போடக்கூடியவர் ஆகியோர் தேவை.
தொடர்புகளுக்கு: **077 055 6949**
ஆனைக்கோட்டை

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்லத்துரை இராஜரட்ணம்

**அன்னை மடியில்**
**14.08.1933**

**ஆண்டவன் அடியில்**
**30.07.2018**

**திதி: ஆடிமாத தேய்பிறை துதியை**

நீறாகிப் போனாலும் நீங்களே திசைகாட்டி
நித்திய வாழ்வினில் நீங்கா நிறையுரு
அணையாது ஒருபோதும் நாம்கொண்ட பாசம்
இயற்கையின் அசைவுகளில் - உம்
உணர்வுகளை நுகர்ந்து
உம் பாதம் மலர் தூவி வணங்குகின்றோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(cs.55732) (N-1)


# ஊடக மாநாடு யாழில் இன்று

யாழ்., ஜூலை 23
முன்னிலை சோஷலிஸக் கட்சி, புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி, சோஷலிஸ மக்கள் மன்றம் ஆகிய மூன்று இடதுசாரிக் கட்சிகளும், காலி முகத்திடல் அரகலய எழுச்சியில் இணைந்து நின்ற முற்போக்கு ஜனநாயக அமைப்புகள் மற்றும் தனிநபர்கள் ஒன்றிணைந்து அரசியல் வேலைத் திட்ட அடிப்படையில் உருவாக்கிய ஐக்கிய முன்னணி அமைப்பான 'மக்கள் போராட்ட முன்னணியின்' யாழ்ப்பாணத்துக்கான முதலாவது ஊடக மாநாடு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் யாழ்.றிம்மர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன். தட்சணாமருதமடு ம.வி. மாகாண மட்டத்தில் சாதனை

மன்னார், ஜூலை 23

2024 ஆம் ஆண்டுக்கான மடு வலய விளையாட்டுப் போட்டிகளில் தட்சணாமருதமடு மகா வித்தியாலயம் தொடர்ச்சியாக பல்வேறு வெற்றிகளைப் பெற்று மடு கல்வி வலயத்துக்கும் மன்னார் மாவட்டத்துக்கும் பெருமை சேர்த்துள்ளது. கடந்த 13 ஆம், 14 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற, மாகாணமட்ட தைக்வெண்டோபோட்டியிலே நான்கு முதலாம் இடங்கள் ஒரு இரண்டாம் இடம் ஒரு மூன்றாம் இடம் என மிகப்பெரிய சாதனை நிகழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமன்றி, கடந்த 18 ஆம்,19 ஆம், 20 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடந்த கரப்பந்தாட்டப் போட்டியிலும் 18 வயதின் கீழ் பெண்கள் அணியானது மாகாண மட்டத்தில் 2 ஆம் இடத்தைப் பெற்றுள்ளது. (ப-213)



நயினாதீவு இரட்டங்காலி ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத முருகப் பெருமான் ஆலயக் குரோதி வருட மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா, நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ப-66)



# பதக்கங்களைக் குவித்தது விநாயகபுரம் அ. த. க.

முல்லைத்தீவு, ஜூலை 23

வட மாகாண பாடசாலைகளுக்கு இடையேயான மல்யுத்தம், யூடோ, தைக்வொண்டோ போட்டிகளில் அதிக பதக்கங்களைப் பெற்று முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு விநாயகபுரம் அ. த. க. பாடசாலை சாதனை படைத்துள்ளது. அதன்படி 8 மாணவர்கள் மல்யுத்தத்தில் 2 தங்கப்பதக்கத்தையும் 4 வெண்கலத்தையும், தைக்வெண்டோவில் ஒரு வெள்ளிப்பதக்கத்தையும், 3 வெண்கலத்தையும், ஜுடோவில் ஒரு தங்கப்பதக்கத்தையும், 3 வெள்ளிப் பதக்கத்தையும், 4 வெண்கலத்தையும் பெற்று தேசியப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டனர். (ப-13)



அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்தும் 61 ஆவது சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவில், நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சைவாகம பூஷணம் பட்டம் பெற்றார் வழக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவசிறி சுந்தர சிறிரங்கநாதக் குருக்கள். (ப-125)





'ஆடிப்பிறப்பில் தமிழர் நாம் கூடிக் கொண்டாடி குதூகலிப்போம்' எனும் தொனிப்பொருளில் ஆடிப்பிறப்பு கொண்டாட்டம், மன்னார் மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் க. கனகேஸ்வரன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில்நடைபெற்ற நிகழ்வில் உதவி மாவட்டச் செயலர் மா. சிறிஸ்கந்தகுமார், மாவட்டச் செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், மாவட்டச் செயலகத்தின் உத்தியோகத்தர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். (ப-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2024ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு வெளியீடு

கொழும்பு, ஜூலை 23

2024ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு உறுதிப்படுத்தப்பட்டுத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதாகத் தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க நேற்றுத் திங்கட்கிழமை தெரிவித்துள்ளார்.

தேவைக்கேற்ப வாக்காளர் இடாப்பை அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-66)

## பெயர் மாற்றம்

குமரநகர் கைதடி மத்தி, கைதடியில் வசிக்கும் **கந்தசாமி கதீசன்** ஆகிய நான் எனது பெயரை **கந்தசாமி சதீசன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **கந்தசாமி சதீசன்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**கந்தசாமி சதீசன்**

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் ஆசிரியை **திருமதி ம. மகிழ்தினி**
அவர்களின் அன்பு மாமனார்

**வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம்**

அவர்கள் கடந்த 17.07.2024 புதன்கிழமை காலமானார்.
அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் வட்டம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.**

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய ஆசிரியை
**திருமதி மைதிலி ஈஸ்வரன்**
அவர்களின்
அன்புச் சகோதரர்

**கணபதிப்பிள்ளை மகேஸ்வரன்**

அவர்கள் 21.07.2024 அன்று இறைபதமடைந்தார் அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறோம்

**அதிபர், ஆசிரியர்கள்.**
**யா/ கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயம்**
**சாவகச்சேரி.**

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
07 . 03 . 1941



மறைவு
23 . 07 . 2023

**செபமாலை தோமஸ் ஞானேஸ்வரன்**

ஆண்டொன்று ஆனாலும்
அழுது புரண்டாலும்
மீண்டு நீர் வருவீரோ
சாய்மனைக் கதிரையிலே இன்னும் நின் உருவம் தெரிகிறதே
பல முறை எமை மறந்து வாய் "அப்பா" என அழைக்கிறதே
பதில் வரக்காணோமே என்றதும் தான் தன்னிலை உணர்கிறோமே
"அப்பா எங்கயடா?" எனும் அம்மாவின் கேள்விக்கு
பதில் என்ன நாம் சொல்ல
வாசலிலே பார்த்திருக்கும் அண்ணாவின் ஏக்கத்தை
எதைக்கொண்டு நாம் போக்க
சிற்றுண்டி கொண்டு தரும் தாத்தாவை தான் தேடும்
பேரப்பிள்ளைகளை என் செய்ய
நீர் கட்டிய சாம்ராஜ்யம் இங்கிருக்க
எம்மை நீர் தவிக்கவிட்டு போனதென்ன?
நூறாண்டு போனாலும் நீங்காது உம் நினைவு
பரலோக ராஜ்யத்தில் நீர் இருப்பீர் நிச்சயமாய்
இறைவனோடு உம் ஆன்மா இணைந்திருக்க பிரார்த்திக்கிறோம்
எமக்காய் உழைத்தது போதும்
சமாதானத்தில் இளைப்பாறுங்கள் அப்பா.

நினைவுகளுடன்
**குடும்பத்தினர்**

(CS 557391) V-1

## கசிப்புடன் ஒருவர் கைது

ஆவரங்கால் மேற்கு புத்தூர் பகுதியில் கசிப்புடன் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றத்தடுப்புப் பிரிவின் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய வீடொன்று சோதனையிடப்பட்டபோதே மேற்படி நபர் கைது செய்யப்பட்டார். 7 ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்பு மீட்கப்பட்ட நிலையில், சந்தேகநபருக்கு எதிராக சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (ம-23)

CHEC
COLOMBO HIGHER EDUCATION ON CONSULTANCY

உங்களது வெளிநாட்டு உயர்கல்விக்கு இன்றே அடித்தளமிடுங்கள்!

USA
EUROPE
CANADA
IRELAND
UNITED KINGDOM

எங்கள் சிறந்த ஆலோசகர் குழுவை,
Jetwing ஹோட்டல் யாழ்ப்பாணம்
27th of July | 10 am to 2 pm

ஸ்ரீ மதுரா ஹோல் வவுனியா
28th of July | 2 pm to 5 pm
ஆகிய இடங்களில் சந்திக்கலாம்.



உங்கள் உடனடி பதிவுகளுக்கு CV, Passport, IELTS மற்றும் ஏனைய கல்வி ஆவணங்களை கொண்டு வாருங்கள்.

ரூபா. 50,000 பெறுமதியான பதிவை இலவசமாக பெற்றுக்கொள்ளவும்

இன்றே பதிவுகளை மேற்கொள்ள மது : 0777 167 606 | 0117 549 600 | 0774 311 140

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

### விலைமனுக் கோரல்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் நயினாதீவு வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு கட்டடத்தை அமைப்பதற்கான செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அதன்படி முன்மொழியப்பட்ட பின்வரும் பொருட்களை கொள்வனவு செய்ய யாழ்ப்பாணத்தில் தகுதிவாய்ந்த விநியோகத்தர்களிடம் விலைமனுக்கோருகின்றது.

- Roof Beam
- Roof work
- ZN/AL Cutter work
- Paint work
- Aluminum partition work
- Aluminum door and Window works
- Suspended ceiling work
- Electrical work
- Tools

விலை மனுப்பத்திரங்கள் மற்றும் மேலதிக விபரங்களை இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையில் 23 யூலை 2024 முதல் 05 ஆகஸ்ட் 2024 காலை 10.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

**ஏனைய விபரங்களுக்கு:**

- **கிளை நிறைவேற்று உத்தியோகத்தர்,**
  **இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை,**
  **இல.468, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**
  **தொடர்பு இல. 021 2222561 / 0766675526**

**https://www.redcross.lk/cat/tenders/ என்ற இணையத்தளத்தின் ஊடாகவும் இவ் விலைமனுக்கோரல் தொடர்பான விபரங்களை பெற்றுக்கொள்ளமுடியும்.**

விலை மனுக்களை கடித உறையில் பொதியிட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **(SLRCS/PRO/2024/024)** என்ற குறிப்பு இலக்கத்தை குறிப்பிட்டு கீழ்க்காணும் முகவரியிட்டு 05 ஆகஸ்ட் 2024 அன்று காலை 10.30 மணிக்கு முன்னர் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையில் கையளிக்கவும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,**
**இல.106, தர்மபால மாவத்தை,**
**கொழும்பு 07.**

## யுக்தியவால் கரவெட்டியில் 13 பேர் கைது

நெல்லியடி பொலிஸார் நடவடிக்கை!

யாழ்ப்பாணம், ஜூலை 23

நெல்லியடி பொலிஸார் மேற்கொண்ட யுத்திய விசேட சுற்றிவளைப்பு சோதனையின்போது கரவெட்டி மேற்குப் பகுதியில் 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கரவெட்டி மேற்குப் பகுதியில் நேற்று திங்கட் கிழமை காலை நெல்லியடிப் பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் விசேட அதிரடிப்படையினர் இணைந்து யுத்திய நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

இதன்போது பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 13 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-100)

## திருவிழா நாளை

கிளாலி புனித யாகப்பர் ஆலய வருடாந்த திருவிழா நாளை மறுதினம் இடம்பெறவுள்ளது. நாளை மாலை 5 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும், மறுநாள் 25ஆம் திகதி காலை 6 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் அதைத் தொடர்ந்து புனிதரின் தேர்ப்பவனியும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-63)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரித்தாலும்...

குறித்த புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பான அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

ஈழத்தமிழ்மக்கள் இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்கில் தமக்கென ஒரு மரபு வழித் தாயகத்தைக் கொண்ட தேசிய இனம் என்ற அடிப்படையில் சுயநிர்ணய உரிமைக்கு ஏற்புடையவர்கள். அதன் அடிப்படையிலும், சர்வதேசச் சட்டங்களின் அடிப்படையிலும் உச்சப்பட்சத் தன்னாட்சியைக் கோருவதற்கான உரித்துடையவர்கள்.

நீண்ட வரலாற்றையும், மிகச் செழிப்பான பண்பாட்டையும் கொண்ட தமிழ் மக்களின் தனித்துவமான தேசிய இருப்பைச் சிதைக்கும் நோக்குடன் நிலப்பரப்பு ரீதியாகவும், பண்பாட்டு ரீதியாகவும், மத ரீதியாகவும் எனப் பல்வேறு வழிகளில் இலங்கைத் தீவில் இன அழிப்பு நடவடிக்கைகள் ஸ்ரீலங்கா அரசினால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தமிழ்மக்களின் நியாயமான உரிமைப் போராட்டம் தீவிரவாதமாகவும், பிரிவினைவாதமாகவும், பயங்கரவாதமாகவும் சித்திரிக்கப்பட்டு வருகிறது.

ஈழத்தமிழர்கள் இலங்கைத் தீவில் ஒரு தேசிய இனமாக இருப்பதும், கேந்திர முக்கியத்துவம் மிக்க புவிசார் அமைவிடத்தை வாழ்விடமாகக் கொண்டிருப்பதும் அவர்களது பிரதான அரசியல் பலமாகும் என்னும் யதார்த்தத்தின் பின்னணியில் தான் தமிழ்மக்களின் அரசியல் உரிமைப் போராட்டம் முதலில் பிராந்திய மயப்பட்டது. பின்னர் அனைத்துலக மயப்பட்டது.

நடந்து முடிந்த உள்நாட்டுப் போரில் இனப்படுகொலை செய்யப்பட்ட மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் மக்களின் விவகாரத்தில் பன்னாட்டுச் சமூகம் காட்டி வந்திருக்கின்ற கரிசனைகளைச் ஸ்ரீலங்கா அரசு எந்தவிதத்திலும் பொருட்படுத்தவும் இல்லை. ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் எடுத்திருக்கவுமில்லை. அதேநேரத்தில் முள்ளிவாய்க்காலின் பின்னரான கடந்த பதினைந்து ஆண்டுகளில் இலங்கைத் தீவின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக தமிழ்மக்களுக்குச் சம உரிமையை வழங்கும் அரசியல் தீர்வு தொடர்பில் எந்தவொரு நகர்வுகளைக் கூட இதுவரை காலமும் முன்னெடுக்கவில்லை.

இந்த யதார்த்தத்தின் பின்னணியில் தமிழ்த்தேசத்தின் மக்களை ஒன்றுபடுத்துவது என்னும் பிரதான நோக்கத்துடன் எதிர்வரும் ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்று தமிழ்த் தேசியக் கட்சிகளும், தமிழ்மக்கள் பொதுச் சபையும் இணக்கம் கண்டுள்ளன. அத்துடன் இதனைச் செயல்முனைப்புடன் கையாளும் நோக்கில் பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை மேற்கொள்வதென்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது. (அ-ம-66)

## பொதுவேட்பாளர்...

தருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் அராலி விளையாட்டுக் கழகத்தின் 77ஆவது ஆடிப்பிறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்கள் பிரதான மூன்று வேட்பாளர்களுக்கா அல்லது பொது வேட்பாளர்களுக்கா வாக்களிப்பது என்பது குறித்து இதுவரை சரியாக வழிநடத்தப்படவில்லை. முன்பு தமிழினம் ஒரு தலைவரின் கீழ் மிகச்சரியாக வழிநடத்தப்பட்டது. ஆனால் இன்றோ பல தலைவர்களால் சரியான திசையை நோக்கி வழிநடத்தப்பட முடியாத நிலைமை காணப்படுகின்றது.

சிங்களப் பேரினவாத அரசுடன் நாம் எத்தனையோ ஒப்பந்தங்களைச் செய்துள்ளோம். ஆனால், அவை அனைத்தும் 2009ஆம் ஆண்டுடன் காலாவதியாக்கப்பட்டன. இவ்வாறானதொரு பின்னணியில் பொதுவேட்பாளர் குறித்து தற்போது எமக்குத் தேவையுள்ளது. பொது வேட்பாளரை நாம் ஓர் ஆயுதமாகப் பயன்படுத்த வேண்டும். எம்மால் நிறுத்தப்படும் பொதுவேட்பாளரால் நிச்சயமாக ஜனாதிபதியாக முடியாது. ஆனால், பொதுவேட்பாளர் என்ற விடயத்தை எமக்கான கேடயமாகப் பயன்படுத்த வேண்டிய காலம் இது. வடக்கு - கிழக்கில் உள்ள எத்தனை பேரும் பொதுவேட்பாளருக்கு வாக்களிப்பார்களாக இருந்தால், பெரும்பான்மை இனம் எம்மைத் திரும்பிப் பார்க்கும். சர்வதேசம் திரும்பிப் பார்க்கும். ஆதலால், பொதுவேட்பாளர் என்ற தெரிவை நாம் முன்னிறுத்த வேண்டியது தற்போது தவிர்க்கப்பட முடியாததாகும்.

பெரும்பான்மைக் கட்சிகளின் பிரதான வேட்பாளர்கள் வடக்குக்கு வருகின்றார்கள் போகின்றார்கள். ஆனால், எவராவது முள்ளிவாய்க்கால் பிரச்சினை குறித்துப் பேசினார்களா? காணாமற் போனோர் குறித்துப் பேசினார்களா? இல்லவேயில்லை. இவற்றுக்கான தீர்வினை யாரும் சொல்லவில்லை.

ஜே.வி.பி. பதின்மூன்று அப்பால் செல்லமுடியாது என்று கூறுகின்றது. அதிலும் காணி தொடர்பில் பேசவில்லை. ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் ஆகியோரும் தெளிவில்லாமலேயே பேசுகின்றனர் மட்டுமல்லாமல் வடக்கில் ஒன்றும், தெற்கில் ஒன்றுமாக அவர்களின் கருத்துகள் மாறுகின்றன. இவ்வாறானதொரு பின்னணியில், இந்தத் தேர்தலை நாம் முடிந்தளவுக்கு மிகச்சிறப்பாகப் பயன்படுத்தவேண்டும் - என்றார். (அ-ம-125)

## தமிழ்ப்...

யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கத்தில் நேற்று நண்பகல் சுபநேரமான 12.12 மணியளவில் தமிழ்மக்கள் பொதுச்சபையின் முக்கியஸ்தரான பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் தலைமையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

நிகழ்வில் தமிழ்த்தேசியக் கட்சிகளைப் பிரதிநித்துவப்படுத்தும் வகையில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சார்பாக அதன் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ரெலோ அமைப்பின் சார்பாக அதன் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், தமிழ்மக்கள் கூட்டணியின் சார்பாக அதன் செயலாளர் நாயகமும், நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி. விக்னேஸ்வரன், புளொட் அமைப்பின் சார்பாக அதன் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன், தமிழ்த் தேசியக் கட்சியின் சார்பாக அதன் பொதுச் செயலாளர் ந.சிறீகாந்தா, ஜனநாயகப் போராளிகள் கட்சியின் சார்பாக அதன் தலைவர் சி.வேந்தன், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் சார்பாக அதன் தலைவர் பொ. ஐங்கரநேசன் ஆகியோரும், தமிழ்மக்கள் பொதுச்சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல்துறைத் தலைவர் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம், அரசியல் ஆய்வாளரும், சட்டத்தரணியுமான சி.அ.யோதிலிங்கம், அரசியல், சமூக ஆய்வாளர் எம்.நிலாந்தன், அரசியல் விமர்சகர் ஆ.யதீந்திரா, அரசியல், சமூகச் செயற்பாட்டாளர்களான செல்வின் இரேனியஸ், த.வசந்தராஜா, ரா.விக்னேஸ்வரன் ஆகியோரும் கையொப்பமிட்டுள்ளனர்.

பல்வேறு விடயங்களை உள்ளடக்கிக் குறித்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ள நிலையில் தமிழ்ப் பொதுவேட்பாளர் தெரிவு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக அடுத்தகட்ட நடவடிக்கைகள் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை - குறித்த ஒப்பந்தத்தில் தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் கைச்சாத்திடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-125-20-66-27)

## காணி...

மாந்தை மேற்கிலுள்ள சோழ மண்டலம் குளத்தின் கீழ் 30 வருடங்களுக்கு மேலாக அரசாங்க அனுமதியுடன் விவசாயச் செய்கையில் ஈடுபட்டிருந்த அந்தோனியார்புரத்தைச் சேர்ந்த மக்களுக்கு தலா 2 ஏக்கர் காணி வீதம் வழங்குவதாகவும் அதன் ஊடக வாழ்வாதார செயற்பாடுகளை முன்னெடுக்க உதவுவதாகவும் அரசாங்கத்தால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த வாக்குறுதியை அடிப்படையாகக் கொண்டு மக்கள் எந்த ஒரு காணி ஆவணங்கள் இன்றி பல வருடங்களாக அப்பகுதியில் வாழ்வாதாரச் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தனர். சில வாரங்களுக்கு முன்பு அந்தக் காணிகளை அந்தோனியார்புரம் மக்களுக்கு வழங்காது வெளிநாட்டைச் சேர்ந்தவர் உள்ளடங்களாக மன்னார் மாவட்டத்தை சாராத வவுனியா மற்றும் கொழும்பைச் சேர்ந்தவர்களுக்கு வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதை எதிர்த்தே மக்கள் நேற்றுப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அரச அதிகாரிகளும் காணி மாபியாக்களின் கூட்டாளிகளா? அரச அதிகாரிகளே துரோகத்துக்குத் துணை போகாதீர்கள், தமிழ் அரசியல்வாதிகளே ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கின்றீர்களா? போன்ற பல்வேறு வாசகங்களை ஏந்தியவாறு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் இறுதியில் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவை மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரனிடம் கையளித்தனர். "காணி தொடர்பான பிணக்குகளை நீண்ட நாட்கள் முடிவுறுத்தாமல் வைத்திருக்க முடியாது எனவும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் பலருக்கு காணி இல்லாத நிலையில் வேறு மாவட்டத்தையும் வெளிநாட்டையும் சேர்ந்தவர்களுக்கு காணி வழங்குவதை ஏற்கமுடியாது" என மாவட்டச் செயலர் தெரிவித்தார். (அ-ஒ-56)

## கடலட்டைப்...

வேலணைப் பிரதேச காணிப் பயன்பாட்டுக் குழுக்கூட்டம் நேற்றுத் திங்கட்கிழமை பிற்பகல் 1.15 மணியளவில் வேலணைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் க.சிவகரன் தலைமையில் நடைபெற்றது.

அரச காணிகளைப் பல்வேறு தேவைகளின் பொருட்டு நிறுவனங்களுக்குப் பகிர்ந்தளிக்கும் வகையில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் குறித்த கூட்டம் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் வேலணை உதவிப் பிரதேச செயலாளர், மாவட்டக் காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர், பெரும்பாக அலுவலர், விவசாயப் போதனாசிரியர், குடியேற்ற உத்தியோகத்தர், காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போதே அரச காணிச் சட்டம் பிரிவு 62 இன் கீழ் கடலட்டைப் பண்ணை அமைப்பதற்கு 52 நபர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. (அ-ம-20-66)

## வடக்கில்...

2024 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியல் கடந்த 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.

இதற்கு அமைவாக யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தில் 4 இலட்சத்து 92 ஆயிரத்து 280 பேரும், கிளிநொச்சி நிர்வாக மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 907 பேருமாக 5 இலட்சத்து 93 ஆயிரத்து 187 பேரும்,

வன்னி தேர்தல் மாவட்டத்தில் மன்னார் நிர்வாக மாவட்டத்தில் 90 ஆயிரத்து 607 பேரும், முல்லைத்தீவு நிர்வாக மாவட்டத்தில் 86 ஆயிரத்து 889 பேரும், வவுனியா நிர்வாக மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 28 ஆயிரத்து 585 பேருமாக 3 இலட்சத்து 6 ஆயிரத்து 81 பேரும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். (அ-ஒ-5)

## கறுப்பு...

1983 ஆம் ஆண்டு ஜுலை மாதம் இதே நாள்களில் கொழும்பிலும் தெற்கின் இதரப் பகுதிகளிலும் தமிழர்களுக்கு எதிராக மிகப்பெரும் கலவரங்கள் முன்னெடுக்கப்பட்டன. திருநெல்வேலி தபால் பெட்டிச் சந்தியில், புலிகளால் நடத்தப்பட்ட தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டதையடுத்து ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கலவரங்கள் கொழும்பில் ஆயிரக்கணக்கான தமிழர்களின் உயிரைப் பறித்தன.

எட்டு நாள்கள் வரையில் தொடர்ந்த இந்தத் தாக்குதலில் 2 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் இடம்பெயர்ந்ததுடன், 4 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர். வரலாற்றின் 'கறுப்பு ஜுலை' என்று அறியப்படும் இந்தப் படுகொலைகளில் 41ஆவது நினைவேந்தல் இம்முறையும் தமிழர் தாயகத்தின் பல பகுதிகளிலும் உணர்வெழுச்சியுடன் நினைவேந்தப்படுகின்றது. (அ-ம)

## ஜனாதிபதித்...

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கிடையிலான விசேட கலந்துரையாடலொன்று நாளை புதன்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழுவில் நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலின் போதே ஜனாதிபதித் தேர்தல் திகதி தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பை விடுக்கப்போகும் திகதி தீர்மானிக்கப்படவுள்ளது என்றும் தெரியவருகின்றது. (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைடனின் இடத்துக்கு

# ஜனாதிபதி வேட்பாளராக கமலா ஹரிஸ் நியமனம்

வொஷிங்டன், ஜூலை 23
அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக கமலா ஹரிஸை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார் அதிபர் பைடன்.

அமெரிக்க அதிபர் தேர்தல் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள நிலையில், ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக பைடனும், குடியரசுக் கட்சியின் வேட்பாளராக ட்ரம்பும் போட்டியிடத் தயாராகியிருந்தனர். எனினும், ட்ரம்புடனான விவாதத்தின் போதும், அதற்கு முன்னரும் பைடன் நினைவாற்றல் இழப்பால் பெரிதும் அவதிப்பட்டார். அவருடைய உடற் தகுதி மீதும் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டதையடுத்து, ஜனாதிபதித் தேர்தலில் இருந்து விலகும் முடிவை பைடன் நேற்றுமுன்தினம் அறிவித்தார்.

பைடன் விலகியதால், ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக யார் அறிவிக்கப்படுவார்கள் என்பதில் பெரும் எதிர்பார்ப்பு இருந்தது. மிச்செல் ஒபாமா, கமலா ஹரிஸ் ஆகியோருக்கு கூடுதல் வாய்ப்புகள் உள்ளன என்று கருதப்பட்ட நிலையில், கமலா ஹரிஸை வேட்பாளராக உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார் பைடன்.

ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக கமலா ஹரிஸை நிறுத்துவதற்கு நான் எனது முழு ஒப்புதலையும் தெரிவித்துள்ளேன். ஜனநாயகக் கட்சியினர் ஓரணியில் நின்று கமலா ஹரிஸை வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்று பைடன் தெரிவித்துள்ளார். (ம)

## பொங்கல்!

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகை அம்மன் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு விசேட பொங்கல் வழிபாடு இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ம)


## வங்கி மீதி வசதி (SHOW MONEY)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:
**074 173 7684**

(S/55548) J-1

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் இயங்கும் பிரபல உணவகம் ஒன்றிற்கு

- ➤ சமையலாளர் (Chef)
- ➤ உணவு பரிமாறுபவர் (waiter)

தேவை அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:
**077 777 3705**


## கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் (புதுக்கோவில்) கொக்குவில்

**ஆலயம் தொடர்பான பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் என 13.07.2024 ஆம் திகதி வலம்புரி தினசரி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரமானது** குறித்த ஆலயத்தில் 30.11.1962 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட யாப்பின் 13.03 உப பந்தியின்படி சட்டத்திற்கு புறம்பானதாகும். குறித்த யாப்பின் 7ஆம் பந்தியின்படி பொதுக்கூட்டம் நடைபெறவேண்டிய ஏற்பாடு காணப்படுகின்றது என்பதுடன் பந்தி 13.3 பிரகாரம் பொதுக்கூட்டம், விசேட கூட்டம், நிர்வாக சபைக்கூட்டம் என்பவற்றை கூட்டும் அதிகாரம், கடமை செயலாளருக்கே வழங்கப்பட்டுள்ளது என்றும் தற்பொழுதும் குறித்த ஆலயத்தின் செயலாளராக நடராசா ஸ்ரீறஞ்சன் அவர்கள்தான் இருந்து வருவதால் எதுவித அதிகாரமும் இல்லாத பொதுச்சபை உறுப்பினர்கள் என சிலரால் வெளிப்படுத்தி வெளியிட்ட விளம்பரம் சட்டத்திற்கு புறம்பானதும் வலுவற்றதுமாகும் என்பதை குறித்த ஆலய பொதுச்சபை உறுப்பினர்களுக்கும் அடியார்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**ந.ஸ்ரீறஞ்சன்**
**(செயலாளர்)**
**22.07.2024**

(cs.55733) (N-1)

## 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 26.06.2024 புதன்கிழமை சிவபதமடைந்த


### அமரர் செல்லத்துரை சந்திரானந்ததேவி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (24.07.2024) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் கீரிமலை புனிததீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 26.07.2024 வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் **நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணிமண்டபத்திலும்** நடைபெற உள்ளன. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

12, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு : 13.05.1947 உதிர்வு : 25.06.2024

கடந்த 25.06.2024 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

### பொன்னுத்துரை கமலநாதன்

(இளைப்பாறிய அதிபர் - யா/ யூனியன் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி)

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (24.07.2024) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் **இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் மணி மண்டபத்தில்** நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைகின்றோம்

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்திகேட்டு நாம் துயருற்று இருந்தவேளையில் நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும், முகநூல், மின்னஞ்சல் ஆகியவை மூலமாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும், பாதாகைகள் வெளியிட்டவர்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தினர் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்**

(cs.55711) (N-1)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.07. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org